ஆவடி மாநகராட்சி
நாள் :17.11.2020

திருக்குறள்:— வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று.

பொருள்:— மழை இடையறாது பெய்வதனால்தான் உலகத்து உயிர்கள் வாழ்கின்றன அதனால் அம்மழையே உலகிற்கு அமிழ்தம் என்று போற்றுத் தகுந்ததாகும்.

## சிறப்புக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீ சார்வரி வருடம் கார்த்திகை திங்கள் 2—ம் நாள் நவம்பர் 2020, 17—ம் தேதி செவ்வாய் கிழமை மாலை 4.00 மணிக்கு ஆவடி மாநகராட்சி அலுவலக மாமன்ற சிறப்புக் கூட்டம் கீழ்க்காணும் பொருள் குறித்து முடிவெடுக்க நடைபெற உள்ளது.

**<u>பொருள் எண்–1</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.31159/2018/டிபி3, நாள்.07.11.2020 தேதிய கடிதத்தின்படி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பயன்பாட்டில் உள்ள நிலத்தினை வருவாய் துறை மூலம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பெயரில் மாற்றம் (Transfer) செய்ய, ஆட்சேபணை அற்ற சான்று மற்றும் மன்ற தீர்மானம் வழங்க கோரப்பட்டுள்ளது. வரப்பெற்ற நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் மேற்கண்டுள்ள கடிதம் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

மேற்கண்ட கடிதத்தில் தெரிவித்துள்ள இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட திருமுல்லைவாயல் கிராமம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பயன்பாட்டில் உள்ள சர்வே எண்.619–ல் அமைந்துள்ள 0.19 செண்ட் வண்டிபாட்டை வகைப்பாடு இடத்தினை வருவாய் துறை மூலம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பெயரில் மாற்றம் செய்ய ஆட்சேபணை இல்லை என தெரிவிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தின்படி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான வண்டிப்பாட்டை சர்வே எண்.619–ல் அமைந்துள்ள 0.19 செண்ட் பரப்பளவு கொண்ட இடத்தினை அரசின் விதிகளுக்கு உட்பட்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பெயரில் மாற்றம் செய்ய (Transfer) ஆட்சேபணை இல்லை என மாமன்றம் தீர்மானிக்கலாம்.

<u>// மாமன்ற தீர்மான எண் 785 நாள் 17.11.2020 அனுமதிக்கப்பட்டது //</u>

**<u>பொருள் எண்–2</u>**

ஆவடி மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை முழுமையாக நிறைவு பெற்று இதுநாள் வரை சாலை அமைக்கப்படாததால் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைக்கு தோண்டப்பட்ட இடம் முழுவதும் தற்பொழுது குண்டும் குழியுமாக உள்ள சாலைகளும், இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்த கீழ்குறிப்பிட்டுள்ள சேதமடைந்த சாலைகளை மறுசீரமைக்கவும் அதற்கான மதிப்பீடு தொகைக்கு நிதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–28 அவர்களுக்கு கடிதம் வழங்க மாமன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

## தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி (TNUDF) 2020-2021

| வ. எண் | சிப்பம் | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | 1 | வார்டு எண் 1 பஜனை கோயில் தெரு மற்றும் களத்துமேட்டு தெருவிற்கு தார் சாலை அமைத்தல் | 34.70 | |
| 2 | | 2 | வார்டு எண் 2 அம்பேத்கார் தெருவிற்கு தார் சாலை அமைத்தல் | 50.20 | |
| 3 | | 3 | வார்டு எண் 3 பிருந்தாவன் நகர் 1வது தெரு, 4வது தெரு, 8வது குறுக்கு தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 31.50 | |
| 4 | | 4 | வார்டு எண் 4 கலைஞர் நகர் 1வது பிரதான சாலைக்கு தார் சாலை அமைத்தல் பணி | 34.70 | |
| 5 | | 7 | வார்டு எண் 7 சுப்பிரமணி நகர், அப்துல்கலாம் தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 24.00 | |
| 6 | | 7 | வார்டு எண் 7 வெங்கடேஷ்வரா நகர் 1வது, 2வது மற்றும் 3வது குறுக்கு தெருவிற்கு தார் சாலை அமைத்தல் பணி | 23.40 | **198.50** |
| 7 | 2 | 5 & 6 | வார்டு எண் 5,6 திருமுல்லைவாயல் சாலை சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 68.80 | |
| 8 | | 6 | வார்டு எண் 6 அசோக் நகர் முனுசாமி மற்றும் துறைகண்ணு தெருவிற்கு தார் சாலை அமைத்தல் பணி | 28.00 | |
| 9 | | 8 | வார்டு எண் 8 தேவி ஈஸ்வரி நகர், 1வது, 2வது மற்றும் 3வது குறுக்கு தெருவிற்கு மழைநீர் கால்வாயுடன் கூடிய சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 40.90 | |
| 10 | | 8 | வார்டு எண் 8 தென்றல் நகர் மேற்கு 13, 14, 15, 16வது தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 62.00 | **199.70** |
| 11 | 3 | 12 | வார்டு எண் 12 சாந்திபுரம் 1வது, 3வது, 4வது தெருவிற்கு தார் சாலை அமைத்தல் பணி | 70.00 | |
| 12 | | 14 | வார்டு எண் 14 ஜோதி நகர் 6வது, 7வது, 8வது தெருவிற்கு தார் சாலை அமைத்தல் பணி | 26.00 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13 | | 15 | வார்டு எண் 15 நாராயணபுரம் பிரதான சாலை தார் சாலை அமைத்தல் பணி | 25.00 | |
| 14 | | 16 | வார்டு எண் 16 லட்சுமிபுரம் 2வது தெருவிற்கு தார் சாலை அமைத்தல் பணி | 42.00 | |
| 15 | | 16 | வார்டு எண் 16 பாரதி தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 21.00 | |
| 16 | | 17 | வார்டு எண் 17 கார்டன் தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 15.80 | **199.80** |
| 17 | **4** | 16 | வார்டு எண் 16 பாண்டியன் நகர் பகுதிக்கு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 70.00 | |
| 18 | | 16 | வார்டு எண் 16 அசோக் நகர் மற்றும் அசோக் நிரஞ்சன் நகர் மற்றும் குறுக்கு தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 78.00 | |
| 19 | | 17 | வார்டு எண் 17 ஜே.பி எஸ்டேட் 18வது தெரு மற்றும் சிவன் கோயில் தெருவிற்கு தார் சாலை அமைத்தல் பணி | 20.00 | |
| 20 | | 17 | வார்டு எண் 17 தில்லை நகர் பகுதிக்கு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 24.00 | **192.00** |
| 21 | **5** | 25 | வார்டு எண் 25 இராமலிங்கபுரம் காந்தி தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 35.70 | |
| 22 | | 27 | வார்டு எண் 27 பெரியார் நகர் அண்ணா தெரு, குறுக்கு தெரு மற்றும் சாஸ்திரி தெருவிற்கு தார் சாலை அமைத்தல் பணி | 81.90 | |
| 23 | | 27 | வார்டு எண் 27 புதுநகர் 6வது , 7வது தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 39.40 | |
| 24 | | 27 | வார்டு எண் 27 புதுநகர் 8வது , 9வது தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 39.40 | **196.40** |
| 25 | **6** | 28 | வார்டு எண் 28 காமராஜ் நகர் 2வது தெருவிற்கு தார் சாலை அமைத்தல் பணி | 31.50 | |
| 26 | | 30 | வார்டு எண் 30 கருமாரியம்மன் கோயில் சாலைக்கு தார் சாலை அமைத்தல் பணி | 26.00 | |
| 27 | | 35 | வார்டு எண் 35 சிந்து நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு தெருவிற்கு தார் சாலை அமைத்தல் பணி | 50.00 | |
| 28 | | 37 | வார்டு எண் 37 சேக்காடு மேட்டு தெரு, தேவராஜாபுரம் குறுக்கு தெருவிற்கு தார் சாலை அமைத்தல் பணி | 36.00 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 29 | | 39 | வார்டு எண் 39 மாங்குளம் பிள்ளையார் கோயில் பிரதான சாலை மற்றும் குறுக்கு தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 28.00 | |
| 30 | | 36 | வார்டு எண் 36 அண்ணா நகர் 10வது, 11வது தெருவிற்கு தார் சாலை அமைத்தல் பணி | 28.00 | **199.50** |
| 31 | **7** | 36 | வார்டு எண் 36 அண்ணா நகர் 8வது தெரு விரிவாக்கம், கண்ணதாசன் தெரு மற்றும் அண்ணா பிரதான சாலை விரிவாக்கம் பகுதிக்கு தார் சாலை அமைத்தல் பணி | 42.00 | |
| 32 | | 35 | வார்டு எண் 35 தனலட்சுமி பிரதான சாலை மற்றும் குறுக்கு தெருவிற்கு தார் சாலை அமைத்தல் பணி | 37.80 | |
| 33 | | 38 | வார்டு எண் 38 வெங்கடாபுரம் பிரதான சாலைக்கு தார் சாலை அமைத்தல் பணி | 37.80 | |
| 34 | | 39 | வார்டு எண் 39 சித்தேரி கரை தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 43.00 | |
| 35 | | 48 | வார்டு எண் 48 கணேஷ் நகர் விரிவாக்கம் பகுதிக்கு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 33.50 | **194.10** |
| 36 | **8** | 45 | வார்டு எண் 45 உழைப்பாளர் நகர் 4வது தெருவிற்கு மழைநீர் கால்வாயுடன் கூடிய தார் சாலை அமைத்தல் பணி | 48.00 | |
| 37 | | 46 | வார்டு எண் 46 எல்லையம்மன் நகர் முதல் பஜார் தெரு வரை தார் சாலை அமைத்தல் பணி | 42.00 | |
| 38 | | 47 | வார்டு எண் 47 அண்ணா தெருவிற்கு மழைநீர் கால்வாயுடன் கூடிய தார் சாலை அமைத்தல் பணி | 55.00 | |
| 39 | | 48 | வார்டு எண் 48 பாரதி நகர் 1வது தெரு முதல் 9வது குறுக்கு தெரு வரை சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 55.00 | **200.00** |
| | | | | **1580.00** | **1580.00** |

**அலுவலக குறிப்பு:-**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேலும் மேற்படி சாலைப்பணிகளை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி (TNUDF) 2020–2021ன் நிதி உதவி பெற வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–05 அவர்களுக்கு தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பிரேரணை அனுப்பியமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
3. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி (TNUDF) 2020–2021ன் கீழ், 90% சதவீதம் மானியமாகவும் அல்லது கடனாகவும், 10% சதவீதம் உள்ளாட்சி நிதியில் (ULB) இருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

// மாமன்ற தீர்மான எண் 786 நாள் 17.11.2020 அனுமதிக்கப்பட்டது //

**<u>பொருள் எண்–3</u>**

ஆவடி மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை முழுமையாக நிறைவு பெற்று இதுநாள் வரை சாலை அமைக்கப்படாததால் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைக்கு தோண்டப்பட்ட இடம் முழுவதும் தற்பொழுது குண்டும் குழியுமாக உள்ள சாலைகளும், இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்த கீழ்குறிப்பிட்டுள்ள சேதமடைந்த சாலைகளை மறுசீரமைக்கவும் அதற்கான மதிப்பீடு தொகைக்கு நிதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–28 அவர்களுக்கு கடிதம் வழங்க மாமன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி (TNUDF) 2020-2021**

| வ. எண் | சிப்பம் | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | **1** | 1 | வார்டு எண் 1 பஜனை கோயில் தெரு மற்றும் களத்துமேட்டு தெருவிற்கு தார் சாலை அமைத்தல் | 34.70 |
| 2 | | 2 | வார்டு எண் 2 அம்பேத்கார் தெருவிற்கு தார் சாலை அமைத்தல் | 50.20 |
| 3 | | 3 | வார்டு எண் 3 பிருந்தாவன் நகர் 1வது தெரு, 4வது தெரு, 8வது குறுக்கு தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 31.50 |
| 4 | | 4 | வார்டு எண் 4 கலைஞர் நகர் 1வது பிரதான சாலைக்கு தார் சாலை அமைத்தல் பணி | 34.70 |
| 5 | | 7 | வார்டு எண் 7 சுப்பிரமணி நகர், அப்துல்கலாம் தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 24.00 |
| 6 | | 7 | வார்டு எண் 7 வெங்கடேஷ்வரா நகர் 1வது, 2வது மற்றும் 3வது குறுக்கு தெருவிற்கு தார் சாலை அமைத்தல் பணி | 23.40 |
| 7 | **2** | 5 & 6 | வார்டு எண் 5,6 திருமுல்லைவாயல் சாலை சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 68.80 |
| 8 | | 6 | வார்டு எண் 6 அசோக் நகர் முனுசாமி மற்றும் துறைகண்ணு தெருவிற்கு தார் சாலை அமைத்தல் பணி | 28.00 |
| 9 | | 8 | வார்டு எண் 8 தேவி ஈஸ்வரி நகர், 1வது, 2வது மற்றும் 3வது குறுக்கு தெருவிற்கு மழைநீர் கால்வாயுடன் கூடிய சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 40.90 |

**198.50**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | | 8 | வார்டு எண் 8 தென்றல் நகர் மேற்கு 13, 14, 15, 16வது தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 62.00 | **199.70** |
| 11 | **3** | 12 | வார்டு எண் 12 சாந்திபுரம் 1வது, 3வது, 4வது தெருவிற்கு தார் சாலை அமைத்தல் பணி | 70.00 | |
| 12 | | 14 | வார்டு எண் 14 ஜோதி நகர் 6வது, 7வது, 8வது தெருவிற்கு தார் சாலை அமைத்தல் பணி | 26.00 | |
| 13 | | 15 | வார்டு எண் 15 நாராயணபுரம் பிரதான சாலை தார் சாலை அமைத்தல் பணி | 25.00 | |
| 14 | | 16 | வார்டு எண் 16 லட்சுமிபுரம் 2வது தெருவிற்கு தார் சாலை அமைத்தல் பணி | 42.00 | |
| 15 | | 16 | வார்டு எண் 16 பாரதி தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 21.00 | |
| 16 | | 17 | வார்டு எண் 17 கார்டன் தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 15.80 | **199.80** |
| 17 | **4** | 16 | வார்டு எண் 16 பாண்டியன் நகர் பகுதிக்கு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 70.00 | |
| 18 | | 16 | வார்டு எண் 16 அசோக் நகர் மற்றும் அசோக் நிரஞ்சன் நகர் மற்றும் குறுக்கு தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 78.00 | |
| 19 | | 17 | வார்டு எண் 17 ஜே.பி எஸ்டேட் 18வது தெரு மற்றும் சிவன் கோயில் தெருவிற்கு தார் சாலை அமைத்தல் பணி | 20.00 | |
| 20 | | 17 | வார்டு எண் 17 தில்லை நகர் பகுதிக்கு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 24.00 | **192.00** |
| 21 | **5** | 25 | வார்டு எண் 25 இராமலிங்கபுரம் காந்தி தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 35.70 | |
| 22 | | 27 | வார்டு எண் 27 பெரியார் நகர் அண்ணா தெரு, குறுக்கு தெரு மற்றும் சாஸ்திரி தெருவிற்கு தார் சாலை அமைத்தல் பணி | 81.90 | |
| 23 | | 27 | வார்டு எண் 27 புதுநகர் 6வது , 7வது தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 39.40 | |
| 24 | | 27 | வார்டு எண் 27 புதுநகர் 8வது , 9வது தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 39.40 | **196.40** |
| 25 | **6** | 28 | வார்டு எண் 28 காமராஜ் நகர் 2வது தெருவிற்கு தார் சாலை அமைத்தல் பணி | 31.50 | |
| 26 | | 30 | வார்டு எண் 30 கருமாரியம்மன் கோயில் சாலைக்கு | 26.00 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | தார் சாலை அமைத்தல் பணி | | |
| 27 | | 35 | வார்டு எண் 35 சிந்து நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு தெருவிற்கு தார் சாலை அமைத்தல் பணி | 50.00 | |
| 28 | | 37 | வார்டு எண் 37 சேக்காடு மேட்டு தெரு, தேவராஜாபுரம் குறுக்கு தெருவிற்கு தார் சாலை அமைத்தல் பணி | 36.00 | |
| 29 | | 39 | வார்டு எண் 39 மாங்குளம் பிள்ளையார் கோயில் பிரதான சாலை மற்றும் குறுக்கு தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 28.00 | |
| 30 | | 36 | வார்டு எண் 36 அண்ணா நகர் 10வது, 11வது தெருவிற்கு தார் சாலை அமைத்தல் பணி | 28.00 | **199.50** |
| 31 | | 36 | வார்டு எண் 36 அண்ணா நகர் 8வது தெரு விரிவாக்கம், கண்ணதாசன் தெரு மற்றும் அண்ணா பிரதான சாலை விரிவாக்கம் பகுதிக்கு தார் சாலை அமைத்தல் பணி | 42.00 | |
| 32 | | 35 | வார்டு எண் 35 தனலட்சுமி பிரதான சாலை மற்றும் குறுக்கு தெருவிற்கு தார் சாலை அமைத்தல் பணி | 37.80 | |
| 33 | **7** | 38 | வார்டு எண் 38 வெங்கடாபுரம் பிரதான சாலைக்கு தார் சாலை அமைத்தல் பணி | 37.80 | |
| 34 | | 39 | வார்டு எண் 39 சித்தேரி கரை தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 43.00 | |
| 35 | | 48 | வார்டு எண் 48 கணேஷ் நகர் விரிவாக்கம் பகுதிக்கு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 33.50 | **194.10** |
| 36 | | 45 | வார்டு எண் 45 உழைப்பாளர் நகர் 4வது தெருவிற்கு மழைநீர் கால்வாயுடன் கூடிய தார் சாலை அமைத்தல் பணி | 48.00 | |
| 37 | **8** | 46 | வார்டு எண் 46 எல்லையம்மன் நகர் முதல் பஜார் தெரு வரை தார் சாலை அமைத்தல் பணி | 42.00 | |
| 38 | | 47 | வார்டு எண் 47 அண்ணா தெருவிற்கு மழைநீர் கால்வாயுடன் கூடிய தார் சாலை அமைத்தல் பணி | 55.00 | |
| 39 | | 48 | வார்டு எண் 48 பாரதி நகர் 1வது தெரு முதல் 9வது குறுக்கு தெரு வரை சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 55.00 | **200.00** |
| | | | | **1580.00** | **1580.00** |

மேலும் செலவினத் தொகையினை கீழ்கண்டவாறு மேற்கொள்ள TNUDF/Projects/Avadi Roads Dated 17.11.2020 கடிதம் வரப்பெற்றுள்ளது. கீழ்

குறிப்பிட்டுள்ள விகிதத்தின்படியும் (Funding Patern ), TNUDF கடிதத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகளின் படி செலவினத் தொகையினை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. To take up the road improvement project in Avadi city municipal Corporation at a cost of Rs 15.80 crores with financial assistance from TNUDF own funds.
2. To avail the financial assistance of Rs 14.22 crores as loan from TNUDF own funds for the road improvement project in Avadi City Municipal Corporation.
3. To meet the debt service from the general funds of the Avadi City Municipal Corporation.

(கோப்பு எண் 6221/2020/இ1)

**அலுவலக குறிப்பு:-**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி சாலைப்பணிகளை தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சி திட்டம்(TNUDF)2020–2021ன் நிதி உதவி பெற வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–05 அவர்களுக்கு பிரேரணை அனுப்பியமைக்கு (Proposal) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
3. பணியின் செலவினத் தொகையினை மேற்படி விகிதத்தின் படி (Funding Pattern) மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 787 நாள் 17.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

பா.நாராயணன்
(ஒப்பம்) / xxxxxxxx
தனி அலுவலர் / ஆணையர்
ஆவடி மாநகராட்சி.

நாள்: 17.11.2020

ஆவடி மாநகராட்சி
நாள் :30.11.2020

திருக்குறள்:– துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

பொருள்:– உண்பவர்களுக்குச் சிறந்த உணவுகளை உருவாக்கிக் கொடுத்து அவற்றை உண்பவர்களுக்குத் தானும் உணவாக இருப்பது மழையாகும்.

## சாதாரணக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீ சார்வரி வருடம் கார்த்திகை திங்கள் 15–ம் நாள் நவம்பர் 2020, 30–ம் தேதி திங்கள் கிழமை மாலை 4.00 மணிக்கு ஆவடி மாநகராட்சி அலுவலக மாமன்ற சாதாரணக் கூட்டம் கீழ்க்காணும் பொருள் குறித்து முடிவெடுக்க நடைபெற உள்ளது.

**பொருள் எண்–1**

ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 25ல் உள்ள ராமலிங்கபுரம் பிரதான சாலையில் குண்டும் குழியுமாக உள்ள விடுபட்ட சாலைக்கு தார் சாலை அமைத்து தரும்படி மேற்படி பகுதி பொது மக்கள் மனு மூலம் கோரியுள்ளார்கள். மேற்படி பகுதியினை மாநகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆகியோர் நேரடி ஆய்வு செய்து அறிவுறுத்தியத்தின் அடிப்படையில் விடுப்பட்டுள்ள பகுதிக்கு புதியதாக தார் சாலை அமைக்கவும் அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.8.00 இலட்சத்திற்கும் பணியினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
3. 2020–21ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு செய்திடவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 788 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்–2**

இம்மாநகராட்சியில் உள்ள கணக்கு பிரிவில் உள்ள BRV's, BPV's மற்றும் இதர பதிவேடுகள் பைண்டிங் செய்யவும், மேலும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படும் வருமான வரி மற்றும் GST (GST R7, GST R1& 3B) ஆகியவை தாக்கல் செய்ய மாதந்தோறும் Consultancy கட்டணம் செலுத்தவும். மேலும், இங்குள்ள உடனிகழ் தணிக்கைக்கு உடனுக்குடன் மாதந்தோறும் கணக்குகளை தயார் செய்ய மற்றும் ஆண்டுக்கணக்குகளும் தயார் செய்து முடிக்கவும் அதற்கான DTP மற்றும் இதர வகையான கணக்குகளை தயார் செய்யவும் தோராய செலவினம் ரூ.4,00,000/– த்திற்கு ஒப்பந்தப்புள்ளி மூலம் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள செலவினத்தை பொதுநிதியின் கீழ் செலவு செய்ய எழுதிய மன்றப் பொருள் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.2809/2019/பி1

**அலுவலக குறிப்பு:–**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 789 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

## பொருள் எண்–3

இம்மாநகராட்சி பொது நிதியின் கீழ் 03.11.2020 அன்று கீழ்க்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப் பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|---|
| 1 | 34,35, மற்றும் 36 | வார்டு எண் 34,35 மற்றும் 36 ஆகிய பகுதிகளில் ஏற்கனவே உள்ள பாதாள சாக்கடை குழாய்களை கண்டறிந்து சாக்கடை அடைப்புகளை அகற்றி புதியதாக இணைப்பு வழங்குதல் மற்றும் ஆள் இறங்கும் தொட்டிகளை உயர்த்தி கட்டுதல் பணி. | 20.00 | B.Ravi<br><br>V.B.Associate | 0.01 % குறைவு<br><br>4.90 % அதிகம் |

கோப்பு எண்.6523/2020/இ2

**அலுவலக குறிப்பு:-**

1. மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் பணி உத்தரவு வழங்கியமைக்கும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

// மாமன்ற தீர்மான எண் 790 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //

## பொருள் எண்–4

இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு பகுதியில் சாலையோர வியாபாரிகளுக்கு கணக்கெடுப்பு செய்து GIS மேற்கொள்ளப்பட்டு உரிமம் வழங்குவது தொடர்பாக நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கீழ்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை (நபர் ஒன்றிற்கு) |
|---|---|---|
| 1. | ஹக்ரோய்ஸ் எண்.5, சர்ச் தெரு, திருமுல்லைவாயில், சென்னை–62 | 385.00 |
| 2. | ஏத்தென்ஸ் சார்டியல் எடுக்கேஷன் டிரஸ்ட் அண்ணாசாலை திருவண்ணாமலை | 295.00 |
| 3. | நீர் துளிகள் இயக்கம் மாரியம்மன் கோவில் 10வது தெரு, திருவண்ணாமலை | 340.00 |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.11518/2014/எப்1

**அலுவலக குறிப்பு:–**

1. குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்திற்கு மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமைக்கு மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 791 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்–5**

ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 16ல் பருத்திப்பட்டு காலணி அம்பேத்கார் தெரு குண்டும் குழியுமாக உள்ளதால் மழைக்காலங்களில் மழைநீர் ஆங்காங்கே குட்டைபோல் தேங்கி நிற்பதால் பொது மக்களும் மற்றும் வாகன போக்குவரத்திற்கு சிரமமும் சுகாதார சீர்கேடு ஏற்படுவதாலும், மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். மேற்படி பகுதியினை மாநகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆகியோர் நேர் ஆய்வு செய்து உடனடியாக சிமெண்ட் சாலை அமைக்க அறிவுறுத்தியுள்ளார்கள். அதன் அடிப்படையில் பொது மக்களின் பயன்பாட்டினை அவசியம் கருதி மேற்படி சாலையினை சிமெண்ட் சாலையாக அமைப்பதற்கு அதற்கான தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.19.80 இலட்சத்திற்கும் பணியினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
3. 2020–21ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு செய்திடவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 792 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்–6**

இம்மாநகராட்சி பொது நிதியின் கீழ் 03.11.2020 அன்று கீழ்க்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப் பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|---|
| 1 | 1 முதல் 48 வரை | ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 48 வரை உள்ள பகுதிகளில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தாழ்வான பகுதிகளின் விவரம் குறித்தான வரைபடம் தயார் செய்தல், புகைப்படம் எடுத்து தொகுப்பாக தயாரித்தல், Torch light, Gas lighter, பொது மக்களிடம் பருவ மழை குறித்தான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரசுரங்கள் தயாரித்தல் பணி | 3.00 | Sadha Construction<br><br>R.Muralikrishnan | 0.01 % குறைவு<br><br>4.99 % அதிகம் |

கோப்பு எண்.4967/2020/இ1

**அலுவலக குறிப்பு:-**

1. மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் பணி உத்தரவு வழங்கியமைக்கும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 793 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்—7**

ஆவடி மாநகராட்சி பகுதியில் உள்ள 48 வார்டுகள் அடங்கிய அனைத்து பகுதிகளிலும் திறந்த வெளி கழிப்பிடமில்லா பகுதிகளாகவும் 100 சதவீதம் கழிப்பிடம் பயன்பாடு உள்ளதாகவும் அதிகார பூர்வமாக அறிவிப்பு விரைவில் வெளிப்பட உள்ளது. அதன் தொடர்பாக அனைத்து பள்ளி நிர்வாகத்திடமும், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள், நகர்நல நிர்வாகத்திடமிருந்தும், பொது மக்களின் பிரதிநிதிகளிடமிருந்தும் மற்றும் மக்களிடமிருந்தும் திறந்த வெளி கழிப்பிடமாக எந்த பகுதியும் பயன்படுத்த மாட்டோம் என உறுதி மொழி பெறவும், பொது மக்களின் ஆட்சபேனை மற்றும் ஆலோசனைகள் ஏதுமிருப்பின் 15 தினங்களுக்குள் பெறவும் மற்றும் தமிழ் நாளிதழில் பிரசுரம் செய்யவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.7153/2020/எச்2

**அலுவலக குறிப்பு:—**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 794 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்—8**

இம்மாநகராட்சி **பொது நிதியின் கீழ் 05.11.2020** அன்று கீழ்க்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப் பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பு நோக்கு பட்டியல் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|
| 1 | ஆவடி மாநகராட்சி சுகாதார பிரிவில் இயங்கி வரும் LCV வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்தல் பணி (TN 12 AB 3026, TN 12 AB 2923, TN 12 AB 2985, TN 20 CW 5175, TN 12 AB 2997, TN 12 AB 2971) | 1.80 | Sakthi Body Works<br><br>ARV Body Builders | 0.01 % குறைவு<br><br>4.75 % அதிகம் |
| 2 | ஆவடி மாநகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் ஈப்பு வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்தல் பணி (TN 12 AB 5005) | 0.17 | Sakthi Body Works<br><br>ARV Body Builders | 0.04 % குறைவு<br><br>4.85 % அதிகம் |
| 3 | ஆவடி மாநகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் Jetting rodding வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்தல் பணி (TN 12 AB 8943) | 2.35 | Sakthi Body Works<br><br>ARV Body Builders | 0.03 % குறைவு<br><br>4.50 % அதிகம் |

கோப்பு எண்.5448/2020/இ2

**அலுவலக குறிப்பு:-**

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பு நோக்கு பட்டியலினை மாமன்றம் அனுமதிக்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 795 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்—9**

இம்மாநகராட்சி **பொது/குடிநீர்/ கல்வி நிதியின் கீழ் 10.11.2020** அன்று கீழ்க்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப் பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பு நோக்கு பட்டியல் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|---|
| 1 | 8 | தென்றல் நகர் கிழக்கு 8வது தெரு மற்றும் 10வது தெரு குறுக்கு தெருவில் மழைநீர் கால்வாய் அமைத்தல் பணி | 13.50 | Mars Construction<br>Jayashree Construction | 0.01 % குறைவு<br>4.99 % அதிகம் |
| 2 | 1 முதல் 48 வரை, 9 மற்றும் 24 | வார்டு எண் 9ல் பாலாஜி நகர் பகுதியில் கழிவு நீர் குழாய் பதித்தல் பணி மற்றும் வார்டு எண் 24 பழைய வட்டாட்சியர் அலுவலகத்தில் மறுசீரமைத்தல் பணி மற்றும் வார்டு எண் 1 முதல் 48 வரை உள்ள பசுமை உரக்கிடங்கில் உள்ள மக்காத குப்பைகளை அரைக்கும் இயந்திரம், மோட்டார்களை பழுது பார்த்தல் பணியை மேற்கொள்ளுதல் | 3.60 | C.D.S.Enterprises<br>Unnikrishnan | 4.80 % அதிகம்<br>5.20 % அதிகம் |
| 3 | 15 | கோணம்பேடு மாநகராட்சி பள்ளியிலுள்ள கட்டிடத்தின் மராமத்து பணி மேற்கொள்ளுதல் | 4.50 | K.R.Murugan<br>S.Mari | 4.00 % அதிகம்<br>5.30 % அதிகம் |
| 4 | 17 | விஜயாந்தா குறுக்கு தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி. | 9.80 | R.Muralikrishnan<br>P.Rajendran | 0.01 % குறைவு<br>4.80 % அதிகம் |
| 5 | 18 | ஆவடி தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள மேல்நிலைப்பள்ளியில் மறுசீரமைப்பு பணி | 6.50 | R.Muralikrishnan<br>P.Rajendran | 4.50 % அதிகம்<br>5.30 % அதிகம் |
| 6 | 7 | ஜாக் நகர் பகுதியில் உள்ள நேரு தெரு மற்றும் வ.உ.சி தெருவில் புதியதாக சிமெண்ட் சாலையுடன் கூடிய மழைநீர் கால்வாய் அமைத்தல் பணி | 16.40 | M.A.Mathew<br>RLG Associates | 0.01 % குறைவு<br>4.98 % அதிகம் |
| 7 | 29 | காமராஜ் நகர் பள்ளியில் ஏற்கனவே உள்ள பழுதடைந்த சத்துணவு மைய கட்டிடம் இடித்து புதியதாக சத்துணவு மைய கட்டிடம் கட்டுதல் பணி | 10.00 | Annamalaiyar Suppliers<br>R.M.Meenakshi Sundaram | 4.96 % அதிகம்<br>5.20 % அதிகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | 36 | லட்சுமி நகர் பூங்காவில் கழிவறை வசதி ஏற்படுத்தவும், கைப்பிடி அமைத்தல் புள் தரை வசதி, திறந்த வெளி உடற்பயிற்சி, பேவர் பிளாக் வசதி மற்றும் மின் விளக்கு வசதி அமைத்தல் பணி | 10.00 | R.Muralikrishnan<br><br>P.Rajendran | 2.10 % அதிகம்<br><br>4.99 % அதிகம் |
| 9 | 37 | சேக்காடு குப்பை கிடங்கு பகுதியில் புதியதாக சோதனை சாவடி அமைத்து தீயனைப்பு வசதிக்காக புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து வால்வு குழாய் அமைத்தல் பணி | 14.00 | Sadha Construction<br><br>R.Muralikrishnan | 0.04 % குறைவு<br><br>5.66 % அதிகம் |
| 10 | 45 | உழைப்பாளர் நகர் மாநகராட்சி பள்ளியில் பழுதடைந்துள்ள தரைக்கு டைல்ஸ் அமைத்தல், பழுதடைந்த கதவு, ஜன்னல்கள் மாற்றி அமைத்தல் மற்றும் வர்ணம் பூசுதல் மற்றும் இதர பணிகளை மேற்கொள்ளுதல் பணி | 9.50 | S.Mari<br><br>K.R.Murugan | 3.90 % அதிகம்<br><br>5.50 % அதிகம் |
| 11 | 48 | முத்தாப்புதுபேட்டை சபி நகர் பகுதியில் பாதாள சாக்கடை பிரதான குழாய் அடைப்பு மற்றும் ஆள் இறங்கும் தொட்டி உள்ள பழுதுகள் மற்றும் பிரதான குழாயில் உள்ள அடைப்புகளை நீக்கம் செய்தல் பணி | 9.50 | B.Ravi<br><br>V.B.Associates | 0.02 % குறைவு<br><br>5.30 % அதிகம் |

கோப்பு எண்.**6754/2020/இ1**

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மேற்படி பணிகளுக்கு வரபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் **1,4,6,9** மற்றும் **11** மதிப்பீட்டை விட குறைவாகவும் மற்றும் வரிசை எண் **2,3,5,7,8** மற்றும் **10** அதிகத்தில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதி எதிர்நோக்கியும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்றும் பணி உத்தரவு வழங்கியமைக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>// மாமன்ற தீர்மான எண் 796 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //</u>

<u>பொருள் எண்–10</u>

இம்மாநகராட்சி **பொது/குடிநீர்/கல்வி நிதியின் கீழ் 11.11.2020** அன்று கீழ்க்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப் பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பு நோக்கு பட்டியல் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|---|
| 1 | 7 | வாட்டர் கம்பெனி சாலையில் புதியதாக ஆழ்துளை கிணறு மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் பணி | 7.50 | Annamalaiyar Suppliers<br>R.M.Meenakshu Sundaram | 0.02 % குறைவு<br>4.75 % அதிகம் |
| 2 | 16 | பருத்திப்பட்டு மாநகராட்சி பள்ளியில் சுற்றுச்சுவர் அமைத்தல் பணி மற்றும் கோவர்த்தனகிரி மேல்நிலைப்பள்ளியில் சுற்றுச்சுவரை உயர்த்தி கட்டுதல் மற்றும் இதர பணிகளை மேற்கொள்ளுதல் | 10.00 | K.Rajaram pandian<br>R.Muralikrishnan | 4.60 % அதிகம்<br>5.30 % அதிகம் |
| 3 | 16 | லட்சுமிபுரம் 2வது குறுக்கு தெரு மற்றும் பாரதி தெருவிலுள்ள சாலையினை சீர் செய்தல் பணி | 2.50 | R.Janakiraman<br>K.R.Murugan | 0.02 % குறைவு<br>4.88 % அதிகம் |
| 4 | 17 | பொதிகை நகர் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் பணி | 7.50 | C.D.S Enterprises<br>RLG Associates | 0.03 % குறைவு<br>3.90 % அதிகம் |
| 5 | 19 | அருந்ததிபுரம் 4வது தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் பணி | 7.20 | D.Srinivasa Thilak<br>R.Muralikrishnan | 0.03 % குறைவு<br>3.90 % அதிகம் |
| 6 | 20 | எச்.வி.எப் (எச்.வி.எப் செல்லும் வழி, முருகப்பா பாலிடெனிக் பின்புறம்) சாலையில் தார் சாலை அமைத்தல் பணி | 15.50 | RLG Associates<br>D.Vedamuthu | 0.02 % குறைவு<br>4.88 % அதிகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | 1 முதல் 24 வரை | ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள சத்துணவு மையங்கள், அங்கன்வாடி மையங்கள், சமுதாய கூடங்கள், ஆரம்ப சுகாதார மையங்கள், தொடக்கப்பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள், வார்டு அலுவலக கட்டிடங்கள், வணிக வளாகங்கள், மாநகராட்சி பழைய அலுவலகங்கள், அம்மா உணவகங்கள், நவீன எரிவாயு தகன மேடை கட்டிடங்கள் மற்றும் இதர கட்டிடங்கள் மழைநீர் வெளியேறு பி.வி.சி குழாய்கள் அமைத்தல் பணி. | 5.00 | Sadha Construction<br>R.Muralikrishnan | 0.01 % குறைவு<br>4.40 % அதிகம் |
| 8 | 25 | ராமலிங்கபுரம் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி. | 9.80 | R.Manavalan<br>K.R.Murugan | 0.04 % குறைவு<br>5.66 % அதிகம் |
| 9 | 25 | நேரு நகர் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி. | 9.80 | R.Manavalan<br>K.R.Murugan | 0.05 % குறைவு<br>5.30 % அதிகம் |
| 10 | 30 | பத்மநாபன் தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி. | 7.00 | M.A.Mathew<br>RLG Associates | 0.03 % குறைவு<br>4.65 % அதிகம் |
| 11 | 35 | விஜயலு நாயுடு தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி. | 7.00 | R.Sureshkumar<br>Sadha Construction | 0.03 % குறைவு<br>4.99 % அதிகம் |
| 12 | 35 | பெரியார் நகர் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி. | 7.00 | P.Unnikrishnan<br>M.A.Mathew | 0.03 % குறைவு<br>3.60 % அதிகம் |
| 13 | 39 | குடிநீர் வசதிக்காக தண்ணீர் தொட்டி அமைத்து குடிநீர் குழாய் பதித்தல் பணி | 4.50 | S.Gangatharan<br>K.R.Murugan | 0.04 % குறைவு<br>4.70 % அதிகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14 | 25 முதல் 48 வரை | வார்டு எண் 25 முதல் 48 வரை உள்ள சேதமடைந்த குடிநீர் தொட்டி மாற்றியமைத்து குழாய் பதித்தல் பணி | 4.50 | S.Mari<br><br>S.Gangatharan | 0.05 % குறைவு<br><br>4.82 % அதிகம் |
| 15 | 1 | மிட்டனமல்லி பகுதியில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி பொது குழாய் வசதி அமைத்தல் பணி | 8.10 | S.Mari<br><br>K.R.Murugan | 0.02 % குறைவு<br><br>5.19 % அதிகம் |
| 16 | 2 | மிட்டனமல்லி காலனி பகுதியில் ஏற்கனவே உள்ள ஆழ்துளைகிணற்றில் இருந்து குடிநீர் குழாய் விரிவாக்கம் செய்தல் பணி | 2.50 | S.Mari<br><br>K.R.Murugan | 0.02 % குறைவு<br><br>5.20 % அதிகம் |
| 17 | 8 | சரஸ்வதி நகர் விரிவாக்கம், சிவசக்தி தெரு மற்றும் குறுக்கு தெருவிற்கு புதியதாக சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 25.00 | OVR Construction<br><br>R.Muralikrishnan | 0.02 % குறைவு<br><br>4.70 % அதிகம் |
| 18 | 8 | தென்றல் நகர் மேற்கு 12வது தெருவிற்கு புதியதாக சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 24.00 | R.Rukumani<br><br>K.Sundarajan | 0.02 % குறைவு<br><br>4.99 % அதிகம் |
| 19 | 9 | விவேகனந்தா நகர் பகுதியில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி பொது குழாய் வசதி அமைத்தல் பணி | 11.25 | M.A.Mathew<br><br>RLG Associates | 0.02 % குறைவு<br><br>3.90 % அதிகம் |
| 20 | 10 | சோழம்பேடு பிரதான சாலை (வரி வசூல் மையம் முதல் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் வரை) புதியதாக மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி | 24.90 | M.A.Mathew<br><br>RLG Associates | 0.02 % குறைவு<br><br>4.80 % அதிகம் |
| 21 | 10 | சோழம்பேடு பிரதான சாலை (நவீன எரிவாயு தகன மேடை முதல் வரி வசூல் மையம் வரை) புதியதாக மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி | 25.00 | M.A.Mathew<br><br>RLG Associates | 0.01 % குறைவு<br><br>4.85 % அதிகம் |
| 22 | 18 | தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு செக்டார் 1 ல் 39வது, 40 வது , 6 வது, 7 வது தெரு மற்றும் செக்டார் 2ல் 83 வது தெரு மற்றும் குறுக்குத் தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 25.00 | R.Janakiraman<br><br>K.R.Murugan | 0.01 % குறைவு<br><br>5.30 % அதிகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 23 | 18 | தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு செக்டார் 1 ல் 41 முதல் 47 வது தெரு மற்றும் 4 வது முதல் 5 வது தெருவிற்கு புதியதாக சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 19.00 | Geetha Construction<br><br>R.Janakiraman | 0.02 % குறைவு<br><br>4.10 % அதிகம் |
| 24 | 18 | காமதேனு நகர் பகுதியில் புதியதாக சிமெண்ட் சாலை அமைத்தல் மற்றும் பழுதடைந்த குடிநீர் குழாய் சரி செய்தல் பணி | 5.10 | Geetha Construction<br><br>P.Gangan | 0.03 % குறைவு<br><br>3.90 % அதிகம் |
| 25 | 36 | பாரதிதாசன் தெரு விரிவாக்கம் பகுதியில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி பொது குழாய் வசதி அமைத்தல் பணி | 6.50 | C.D.S Enterprises<br><br>P.Unnikrishnan | 0.01 % குறைவு<br><br>5.66 % அதிகம் |
| 26 | 36 | விவேகானந்தா அவென்யூ பகுதியில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி பொது குழாய் வசதி அமைத்தல் பணி | 6.50 | M.A.Mathew<br><br>RLG Associates | 0.02 % குறைவு<br><br>5.66 % அதிகம் |
| 27 | 39 | கோபாலபுரம் பிரதான சாலை மற்றும் விரிவாக்கம் இரண்டாவது குறுக்கு தெரு மற்றும் விடுப்பட்ட பகுதியில் மழைநீர் கால்வாயுடன் கூடிய சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 25.00 | K.R.Murugan<br><br>S.Mari | 0.04 % குறைவு<br><br>5.00 % அதிகம் |
| 28 | 47 | கலைஞர் தெரு பகுதியில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி பொது குழாய் வசதி அமைத்தல் பணி | 6.20 | M.A.Mathew<br><br>RLG Associates | 0.01 % குறைவு<br><br>6.40 % அதிகம் |

கோப்பு எண்.4058/2020/இ1

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மேற்படி பணிகளுக்கு வரபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1,3,4,5,6,7,8,9,10,11,12,13,14,15,16,17,18,19,20,21,22,23,24,25,26 மற்றும் 27 மதிப்பீட்டை விட குறைவாகவும் மற்றும் வரிசை எண் 2 அதிகத்தில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதி எதிர்நோக்கியும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்றும் பணி உத்தரவு வழங்கியமைக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>// மாமன்ற தீர்மான எண் 797 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //</u>

<u>பொருள் எண்—11</u>

ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 18 தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 60 அடி சாலை பொன்னு சூப்பர் மார்கெட் அருகில் IUDM திட்டத்தின் கீழ் 14.3 கி.மீட்டர் நீளத்திற்கு

மழைநீர் கால்வாய் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் **26** எண்ணம் உயர் அழுத்த மின் கம்பங்கள் சாலையின் நடுவில் உள்ளதால், பணிக்கு இடையூறாக உள்ள உயர் அழுத்த மின்கம்பங்களை சாலையோரமாக மாற்றி அமைத்திட ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.**2,48,910/–**க்கான கேட்பு தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகையை மின்சார வாரியத்திற்கு செலுத்திட மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.7319/2020/இ2

**அலுவலக குறிப்பு:–**

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. அவசர அவசியத்தை முன்னிட்டு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொண்டமைக்கு மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 798 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

## பொருள் எண்–12

இம்மாநகராட்சி **பொது நிதியின் கீழ் 04.11.2020** அன்று கீழ்க்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப் பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பு நோக்கு பட்டியல் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|
| 1 | ஆவடி மாநகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் ஈப்பு வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்து வருடந்திர பணி மேற்கொள்ளுதல் (TN 20 BJ 8779) | 3.63 | Sakthi Body Works<br><br>ARV Body Builders | 0.01 % குறைவு<br><br>4.50 % அதிகம் |
| 2 | ஆவடி மாநகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் ஈப்பு வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்து வருடந்திர பணி மேற்கொள்ளுதல் (TN 20 A 0799) | 1.97 | Sakthi Body Works<br><br>ARV Body Builders | 0.02 % குறைவு<br><br>4.60 % அதிகம் |
| 3 | ஆவடி மாநகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் ஈப்பு வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்து வருடந்திர ஆய்வு புதுப்பித்தல் பணி (TN 20 5917) | 2.99 | Sakthi Body Works<br><br>ARV Body Builders | 0.01 % குறைவு<br><br>4.60 % அதிகம் |

கோப்பு எண்.**5166/2020/இ2**

**அலுவலக குறிப்பு:-**

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பு நோக்கு பட்டியலினை மாமன்றம் அனுமதிக்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 799 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்–13**

ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட பட்டாபிரம் அண்ணா நகர் பகுதியில் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான அங்கன்வாடி மைய கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதாலும், மேற்படி கட்டிடத்தினை ஆய்வு செய்து மேல் நடைவடிக்கை மேற்கொள்ளுமாறும் பள்ளி தலைமை ஆசிரியர் அவர்கள் கடிதம் மூலம் கோரியுள்ளார்கள். மேற்படி கட்டிடத்தினை ஆய்வு செய்ததில் கட்டிடம் மிகவும் பழுதடைந்து பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது. மேற்படி கட்டிடத்தினை மாநகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோர் நேர் ஆய்வு செய்து அறிவுறுத்தியதின் அடிப்படையில் பழுதடைந்த கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தி புதியதாக அங்கன்வாடி கட்டிடம் கட்டவும் அதற்கான மதிப்பீடு தொகை ரூ10.00 இலட்சத்திற்கும் பணியினை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
3. 2020–21ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு செய்திடவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 800 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்–14**

ஆவடி மாநகராட்சி தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய அரசின் MOUD துறையினர் STAR Rating ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கி வருகின்றனர். அதன் ஒருபகுதியாக ஆவடி மாநகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை, திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி முறையே தரம் பிரித்து கையாளப்பட்டு வருகிறது. மேலும் SECONDARY STORAGE AND TRANSPORTATION செய்வது முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது.

எனவே ஆவடி மாநரகாட்சியினை குப்பையில்லா மாநகராட்சியாக (Garbage Free City) மூன்று நட்சத்திர அங்கீகாரம் (THREE STAR RATING) பெற சுய உறுதிமொழி சான்றிதழுக்கு (Self Declaration) மாமன்றம் அனுமதித்துள்ளது.

பொதுமக்கள் தங்கள் ஆட்சேபணைகள் மற்றும் கருத்துகள் ஏதேனுமிருப்பின் ஆணையாளர் ஆவடி மாநகராட்சி அவர்களுக்கு எழுத்து வாயிலாக 15 நாட்களுக்குள் பெறுவது மற்றும் தமிழ் நாளிதழில் பிரசுரம் செய்யவும் அதற்கான தோராய செலவினத்தை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.7153/2020/எச்2

<u>அலுவலக குறிப்பு:—</u>

மாமன்றம் அனுமதிக்கலாம்.

<u>// மாமன்ற தீர்மான எண் 801 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //</u>

<u>**பொருள் எண்—15**</u>

ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட **வார்டு எண் 31** சேக்காடு குப்பைக் கிடங்கில் உள்ள குப்பை கொட்டும் கிடங்கில் குவிக்கப்பட்டுள்ள குப்பைகளை JCB மற்றும் பொக்லைன் இயந்திரம் கொண்டு அகற்றி தருமாறு சுகாதார பிரிவு மூலம் கோரிக்கை வரப்பெற்றுள்ளது. ஆணையாளர் அவர்களின் உத்தரவின் பேரில் மேற்படி பணியினை மேற்கொள்ள வாடகை அடிப்படையில் JCB மற்றும் பொக்லைன் அமைக்க அதற்கான மதிப்பீடு ரூ4.50 இலட்சத்திற்கும் பணியினை மாநகராட்சி பொது/ குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு:-**</u>

1. மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி பொது/குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
3. 2020—21ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு செய்திடவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

<u>// மாமன்ற தீர்மான எண் 802 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //</u>

<u>**பொருள் எண்—16**</u>

ஆவடி மாநகராட்சிக்கு 2020—2021ம் ஆண்டிற்கு தேவையான பதிவேடுகள் மற்றும் படிவங்கள் ஒப்பந்தப் புள்ளிகள் மூலம் பெற்றுக் கொள்ளவும், அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.9.50 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் செலவு செய்ய மாமன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.3016/2020/பி2

**அலுவலக குறிப்பு:–**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

// மாமன்ற தீர்மான எண் 803 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //

**பொருள் எண்–17**

ஆவடி மாநகராட்சிக்கு 2020–2021ம் ஆண்டிற்கு தேவையான கணினி உபகரணங்கள் மற்றும் எழுது பொருட்கள் ஒப்பந்தப் புள்ளிகள் மூலம் பெற்றுக் கொள்ளவும், அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.9.50 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் செலவு செய்ய மாமன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.3015/2020/பி2

**அலுவலக குறிப்பு:–**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

// மாமன்ற தீர்மான எண் 804 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //

**பொருள் எண்–18**

ஆவடி மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டமானது ஜவர்கர்லால் நேரு தேசிய புனரமைப்பு திட்டத்தின் கீழ் (JnNURM) அரசானை (நிலை ) எண் 62 ந.நி.ம.கு.வ.துறை நாள் 12.04.2008ல் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புணரமைப்புத் திட்டத்தின் கீழ் 47 வார்களில் 328 கி.மீ பரப்பளவில் பாதாள சாக்கடை திட்டம் அமைக்க ரூ158.05 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு மேற்படி பணியானது சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மூலம் மேற்கொள்ள ஒப்பதல் வழங்கபட்டு அவர்கள் மூலம் 31.12.2008 தேதியில் பணி துவங்கப்பட்டு தற்போது பணி நிறைவு பெற்று மாநகராட்சி வசம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி பணியானது 4 MLD கொள்ளவு கொண்ட சுத்திகரிப்பு நிலையத்திற்கு வார்டு எண் 1, 2 மற்றும் 48 ஆகிய வார்டுகளில் உள்ள கழிவுநீரை சுத்திகரிப்பு செய்து வெளியேற்றும் வகையிலும், 36 MLD கொள்ளவு கொண்ட சுத்திகரிப்பு நிலையத்திற்கு மீதமுள்ள அனைத்து வார்டுகளும் கழிவுநீர் சுத்திகரிப்பு செய்து வெளியேற்றும் வகையில் வடிவமைக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்டதில் வார்டு

எண் 1, 2 மற்றும் 48 உள்ளடைக்கிய 4 MLD கொள்ளவு கொண்ட சுத்திகரிப்பு நிலையம் முழுவதுமாக கையகப்படுத்தப்பட்டு 100 சதவீத இணைப்பு வழங்கப்பட்டு முழுவதுமாக பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மேலும் 36 MLD கொள்ளவு கொண்ட சுத்திகரிப்பு நிலையம் கட்டுபாட்டில் உள்ள வார்டுகள் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் ஆகியோர் தலைமையில் 24.01.2020 தேதியில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–28 அவர்கள் அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் உத்திரவிட்டதின் அடிப்படையில் நீரேற்று நிலையங்கள் மட்டும் சோதனை ஓட்டம் செய்யப்பட்டு கழிவுநீர் பகிர்மான குழாய்கள் எந்த வித ஆய்விற்கும் உட்படுத்தப்படாமல் அதே நிலையில் மாநகராட்சி மூலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது இணைப்பு வழங்கும் பணி நடைபெறும் போது ஆங்காங்கே அடைப்புகள் ஏற்பட்டு ஆள் இறங்கும் தொட்டிகள் மூலமாக தெருக்களில் வழிந்தோடுவதால் அடைப்புகள் அனைத்தும் சரி செய்து சாலையில் புதைந்துள்ள ஆள் இறங்கும் தொட்டிகள் உயர்த்தி கட்டி சரியான முறையில் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டிய அவசியத்தை கருதி சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்துடன் மேலாண்மை இயக்குநர் அவர்களின் தலைமையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

மேற்படி ஆய்வு கூட்டதில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பழுதுகள் அனைத்தும் நீக்கம் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வர உடனடியாக மதிப்பீடு தயார் செய்து மேல் நடவடிக்கைக்கு மாநகராட்சிக்கு சமர்பிக்கப்படும் என முடிவு செய்யப்பட்டது.

அதன் அடிப்படையில் 36 MLD கொள்ளவு கொண்ட சுத்திகரிப்பு நிலையத்திற்கு உட்பட்ட அனைத்து வார்டுகளில் உள்ள பழுதுகள் நீக்கம் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வர மதிப்பீடு கீழ்காண்டவாறு தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டியும் அதற்கான நிதி வேண்டியும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை –28 அவர்களுக்கு பிரேரணை சமர்பிக்க மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ) |
|---|---|---|
| 1 | Tracing & Raising of Maintenance hole and cleaning the debris, | Rs.32148362.00 |

| | | |
|---|---|---|
| | Removal of dummy in the maintenance hole at various depth and various location in Avadi Under ground sewerage scheme (Package-2) Rectangular up to 45 cm – (Location Zone 3, 3A, 3B, 4, 5, 5A & 15) | |
| 2 | Tracing & Raising of Maintenance hole and cleaning the debris, Removal of dummy in the maintenance hole at various depth and various location in Avadi Under ground sewerage scheme (Package-2) Rectangular above 45 cm (Location Zone 3, 3A, 3B, 4, 5, 5A & 15) | Rs.27387660.00 |
| 3 | Tracing & Raising of Maintenance hole and cleaning the debris, Removal of dummy in the maintenance hole at various depth and various location in Avadi Under ground sewerage scheme (Package-3) Circular Manhole (Location Zone 6,7 & 16) | Rs.22506872.00 |
| 4 | Tracing & Raising of Maintenance hole and cleaning the debris, Removal of dummy in the maintenance hole at various depth and various location in Avadi Under ground sewerage scheme (Package-5) Location Zone 8 & 9 (Package-6) Location Zone 10, 11, 12, 13 & 14 | Rs.35035701.00 |
| | Total | Rs.117078595.00 |

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேலும் மேற்படி பாதாள சாக்கடை பழுதுகள் நீக்கம் செய்ய நிதி உதவி பெற வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–05 அவர்களுக்கு தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பிரேரணை அனுப்பபியமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>// மாமன்ற தீர்மான எண் 805 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //</u>

<u>பொருள் எண்–19</u>

ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வார்டு எண் 25,26,27, 28,29,30,31,36,38,39,41,47 மற்றும் வார்டு எண் 9,15,10,19,21,18,22,23,24,7,17,8,11,13,12,14 என ஆகமொத்தம் 28 வார்டுகள் மின் விளக்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் பணி தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 20 வார்டுகளில் மின் விளக்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் பணியானது மாநகராட்சி மின் கம்பியாளர் மற்றும் உதவியாளர்களை கொண்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது பாதாள சாக்கடை திட்டப்பணி மற்றும் குடிநீர் திட்டப் பணி, 17 எண்ணிக்கை பசுமை உரக்குடில் , 717 எண்ணிக்கை ஆழ்துளை குழாய் கிணறுகள், புதியதாக மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள நெடுஞ்சாலை துறை சாலையில் அமைக்கப்பட்டுள்ள 600 எண்ணிக்கை தெரு விளக்குகள் மற்றும் புதியதாக சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் உயர் கோபுர மின் விளக்குகள் ஆகிய பணிகளும் தற்பொழுது கூடுதலாக மாநகராட்சி பணியாளர்களை கொண்டு பராமரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. தற்பொழுது ஏற்கனவே ஆள் பற்றாக்குறை உள்ள மாநகராட்சியில் கூடுதலாக 4 எண்ணிக்கை மின் கம்பியாளர் மற்றும் உதவியாளர்கள் பணியிலிருந்து ஒய்வு பெற்றுள்ளதால் பணியாளர் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. எனவே சரியான முறையில் தினசரி மின்சார பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரரிடம் இருந்து அனுபவம் வாய்ந்த 3 எண்ணிக்கை மின்கம்பியாளர்கள் மற்றும் 3 எண்ணிக்கை உதவியாளர்கள் ஆகியோரை ஓராண்டு காலத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் விலை விகிதப்படி அமர்த்திக் கொள்ளவும் அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.24.50 இலட்சத்திற்கும் பணியினை மாநகராட்சி பொது/ குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2. இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி பொது/குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
3. 2020–21ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு செய்திடவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

<u>// மாமன்ற தீர்மான எண் 806 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //</u>

**<u>பொருள் எண்–20</u>**

ஆவடி மாநகராட்சி பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு மற்றும் கொசு ஒழிப்பு பணியினை மேற்கொள்ள பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. கொசுப்புழுக்களை அழிக்க டெமிபாஸ் எமல்ஸியேபில் 50% EC எனும் மருந்தும், முதிர்ந்த கொசுக்களை ஒழிக்க புகைபோக்கி இயந்திரம் மூலம் பைரித்திரம் 2% எக்ஸ்ட்ராக்ட் எனும் மருந்தும் தெளிக்கப்பட்டு வருகிறது. மேலும், காய்ச்சல் கண்டவர்களின் பகுதிகளில் அனைத்து பொதுமக்களுக்கும் நிலவேம்பு கசாயம் வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுக் கூட்டங்களில், கொசு மருந்துகள் தேவையான அளவில் இருப்பில் வைத்துக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போது, பொது சுகாதாரப் பிரிவில் கொசு ஒழிப்பு மருந்துகள் இருப்பில் குறைந்து வருகின்றன. மேலும், பொது மேலாளர் (மருந்துகள்), தமிழ்நாடு மெடிக்கல்ஸ் சர்வீசஸ் கார்போரேசன்ஸ் லிமிடெட், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.019/M(P) / INSECT-LARVI (II) / TNMSC / 2014, நாள்.20.01.2020 கடிதத்தின் படி பெந்தியான் 82.5% என்ற மருந்தினை பைரித்திரம் இண்டியா பிரைவேட் லிமிடெட்., தி.நகர்.சென்னை 17 என்ற நிறுவனத்திடமிருந்தும் மற்றும் பொது மேலாளர் (மருந்துகள்), தமிழ்நாடு மெடிக்கல்ஸ் சர்வீசஸ் கார்போரேசன்ஸ் லிமிடெட், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.015/M(P) / INSECT-LARVI (II) / TNMSC / 2017, நாள்.04.09.2018ன் படி பைரித்திரம் 2% எக்ஸ்ட்ராக்ட் என்ற மருந்தினை பாராமவுண்ட் பெஸ்டிசைட் லிமிடெட்., தி.நகர், சென்னை 17 என்ற நிறுவனத்திடமிருந்தும் வாங்கிக்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேலே கண்ட நிறுவனங்களிடமிருந்து பைரித்திரம் 2% எக்ஸ்ட்ராக்ட் 750 லிட்டரும், பெந்தியான் 82.5% 400 லிட்டரும் அதற்காகும் செலவுத் தொகை ரூ.16.80 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
ந.க.எண்.7787/2018/எச்2

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. பொது சுகாதாரப் பிரிவு பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் பணி உத்தரவு வழங்கியமைக்கும் மேற்படி மருந்துகளை வாங்கியமைக்கும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
3. 2020–21ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு செய்திடவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**<u>// மாமன்ற தீர்மான எண் 807 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //</u>**

**<u>பொருள் எண்–21</u>**

இம்மாநகராட்சி பொது நிதியின் கீழ் 12.11.2020 அன்று கீழ்க்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப் பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|---|
| 1 | – | ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மின் விளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள தேவையான புதியதாக மின் உதிரி பாகங்கள் விநியோகம் செய்தல் பணி. | 25.00 | V.K.Contractor<br>R.V.Engineering | 0.01 % குறைவு<br>4.99 % அதிகம் |

கோப்பு எண்.6791/2020/இ2

**அலுவலக குறிப்பு:-**

1. மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் பணி உத்தரவு வழங்கியமைக்கும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 808 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்–22**

ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட விளிஞ்சியம்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிடம் மிகவும் பழுதடைந்து ஆங்காங்கே நீர் கசிவு ஏற்பட்டும், சில இடங்களில் ஜன்னல் மேற்பகுதி இடிந்து விழுந்தும், பல இடங்களில் விரிசல் ஏற்பட்டும் மிகவும் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதாகவும் உடனடியாக ஆய்வு செய்து மராமத்து பணிகள் மேற்கொண்டு பழுதுகள் சரிசெய்து பாதுகாப்பினை உறுதி செய்யுமாறு ஆரம்ப சுகாதார மருத்துவர் அவர்கள் கோரியுள்ளார்கள். அதன் அடிப்படையில் மாநகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆகியோர் நேரடி ஆய்வு செய்து அறுவுறுத்தியதின் அடிப்படையில் ஆரம்ப சுகாதார கட்டிடத்தினை மராமத்து பணிகள் மேற்கொண்டு ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்து நீர்கசிவுகளை சரிசெய்து மின்விளக்கு மற்றும் மின்விசிறிகள் பொருத்தி வண்ணம் பூச மதிப்பீடு ரூ.12.00 இலட்சத்திற்கு மேற்படி பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி பொது/குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
3. 2020–21ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு செய்திடவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 809 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்–23**

ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 48 பெரியார் நகர் 10வது தெரு மற்றும் குறுக்கு தெரு சாலைகள் மிகவும் குண்டும் குழியுமாக போக்குவரத்து வசதி இல்லாமல் மிகவும் சிரமப்படுவதாலும் மேலும், நிவர் புயல் காரணமாக மேலும் சேதமடைந்துள்ளதாலும் சாலை வசதி ஏற்படுத்தி தருமாறு பொதுமக்கள் கோரியுள்ளார்கள். மேற்படி பகுதியினை நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆகியோர் நேரடி ஆய்வு செய்து அறிவுறுத்தியதின் அடிப்படையில் மேற்படி பகுதிக்கு புதியதாக சிமெண்ட் சாலை அமைக்கவும் அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.14.00 இலட்சத்திற்கும், மேற்படி பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2. இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி பொது அல்லது மாநில பேரிடர் நிவராண நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
3. 2020–21ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு செய்திடவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 810 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்–24**

ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 48 சபி நகர் 4வது குறுக்கு தெரு சாலை மிகவும் குண்டும் குழியுமாக போக்குவரத்து வசதி இல்லாமல் மிகவும் சிரமப்படுவதாலும் மேலும், நிவர் புயல் காரணமாக மேலும் சேதமடைந்துள்ளதாலும் சாலை வசதி ஏற்படுத்தி தருமாறு பொதுமக்கள் கோரியுள்ளார்கள். மேற்படி பகுதியினை நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆகியோர் நேரடி ஆய்வு செய்து அறிவுறுத்தியதின் அடிப்படையில் மேற்படி பகுதிக்கு புதியதாக சிமெண்ட் சாலை அமைக்கவும் அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.8.00 இலட்சத்திற்கும், மேற்படி பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2. இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி பொது அல்லது மாநில பேரிடர் நிவராண நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
3. 2020–21ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு செய்திடவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 811 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

**<u>பொருள் எண்–25</u>**

ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 48 பிள்ளையார் கோயில் தெருவில் உள்ள சாலை மிகவும் குண்டும் குழியுமாக போக்குவரத்து வசதி இல்லாமல் மிகவும் சிரமப்படுவதாலும் மேலும், நிவர் புயல் காரணமாக மேலும் சேதமடைந்துள்ளதாலும் சாலை வசதி ஏற்படுத்தி தருமாறு பொதுமக்கள் கோரியுள்ளார்கள். மேற்படி பகுதியினை நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆகியோர் நேரடி ஆய்வு செய்து அறிவுறுத்தியதின் அடிப்படையில் மேற்படி பகுதிக்கு புதியதாக சிமெண்ட் சாலை அமைக்கவும் அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.9.00 இலட்சத்திற்கும், மேற்படி பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2. இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி பொது அல்லது மாநில பேரிடர் நிவராண நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
3. 2020–21ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு செய்திடவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**<u>// மாமன்ற தீர்மான எண் 812 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //</u>**

**<u>பொருள் எண்–26</u>**

ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 48 வெங்கடேஷ்வரா நகர் 6 வது தெருவில் உள்ள சாலை மிகவும் குண்டும் குழியுமாக போக்குவரத்து வசதி இல்லாமல் மிகவும் சிரமப்படுவதாலும் மேலும், நிவர் புயல் காரணமாக மேலும் சேதமடைந்துள்ளதாலும் சாலை வசதி ஏற்படுத்தி தருமாறு பொதுமக்கள் கோரியுள்ளார்கள். மேற்படி பகுதியினை நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆகியோர் நேரடி ஆய்வு செய்து அறிவுறுத்தியதின் அடிப்படையில் மேற்படி பகுதிக்கு புதியதாக சிமெண்ட் சாலை அமைக்கவும் அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.9.50 இலட்சத்திற்கும், மேற்படி பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2. இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி பொது அல்லது மாநில பேரிடர் நிவராண நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
3. 2020–21ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு செய்திடவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**<u>// மாமன்ற தீர்மான எண் 813 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //</u>**

**பொருள் எண்–27**

ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 36 நேதாஜி நகரில் உள்ள குறுக்குத் தெரு மிகவும் குண்டும் குழியுமாக போக்குவரத்து வசதி இல்லாமல் மிகவும் சிரமப்படுவதாலும் மேலும், நிவர் புயல் காரணமாக மேலும் சேதமடைந்துள்ளதாலும் சாலை வசதி ஏற்படுத்தி தருமாறு பொதுமக்கள் கோரியுள்ளார்கள். மேற்படி பகுதியினை நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆகியோர் நேரடி ஆய்வு செய்து அறிவுறுத்தியதின் அடிப்படையில் மேற்படி பகுதிக்கு புதியதாக சிமெண்ட் சாலை அமைக்கவும் அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.17.00 இலட்சத்திற்கும், மேற்படி பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2. இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி பொது அல்லது மாநில பேரிடர் நிவரான நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
3. 2020–21ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு செய்திடவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 814 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்–28**

ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 36 வெங்கடேஷ்வரா அவென்யூ பகுதியில் உள்ள சாலை மிகவும் குண்டும் குழியுமாக போக்குவரத்து வசதி இல்லாமல் மிகவும் சிரமப்படுவதாலும் மேலும், நிவர் புயல் காரணமாக மேலும் சேதமடைந்துள்ளதாலும் சாலை வசதி ஏற்படுத்தி தருமாறு பொதுமக்கள் கோரியுள்ளார்கள். மேற்படி பகுதியினை நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆகியோர் நேரடி ஆய்வு செய்து அறிவுறுத்தியதின் அடிப்படையில் மேற்படி பகுதிக்கு புதியதாக சிமெண்ட் சாலை அமைக்கவும் அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.12.00 இலட்சத்திற்கும், மேற்படி பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2. இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி பொது அல்லது மாநில பேரிடர் நிவரான நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
3. 2020–21ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு செய்திடவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 815 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்–29**

ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 27 ல் N.S.K தெரு மற்றும் கணபதி தெருவில் உள்ள சாலை மிகவும் குண்டும் குழியுமாக போக்குவரத்து வசதி இல்லாமல் மிகவும் சிரமப்படுவதாலும் மேலும், நிவர் புயல் காரணமாக மேலும் சேதமடைந்துள்ளதாலும் சாலை வசதி ஏற்படுத்தி தருமாறு பொதுமக்கள் கோரியுள்ளார்கள். மேற்படி பகுதியினை நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆகியோர் நேரடி ஆய்வு செய்து அறிவுறுத்தியதின் அடிப்படையில் மேற்படி பகுதிக்கு புதியதாக சிமெண்ட் சாலை அமைக்கவும் அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.24.00 இலட்சத்திற்கும் மேற்படி பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி பொது அல்லது மாநில பேரிடர் நிவராண நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
3. 2020–21ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு செய்திடவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 816 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்–30**

ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 27 ல் நாகம்மை தெரு மற்றும் இளங்கோ தெருவில் உள்ள சாலை மிகவும் குண்டும் குழியுமாக போக்குவரத்து வசதி இல்லாமல் மிகவும் சிரமப்படுவதாலும் மேலும், நிவர் புயல் காரணமாக மேலும் சேதமடைந்துள்ளதாலும் சாலை வசதி ஏற்படுத்தி தருமாறு பொதுமக்கள் கோரியுள்ளார்கள். மேற்படி பகுதியினை நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆகியோர் நேரடி ஆய்வு செய்து அறிவுறுத்தியதின் அடிப்படையில் மேற்படி பகுதிக்கு புதியதாக சிமெண்ட் சாலை அமைக்கவும் அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.24.00 இலட்சத்திற்கு மேற்படி பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி பொது அல்லது மாநில பேரிடர் நிவராண நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
3. 2020–21ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு செய்திடவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 817 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்–31**

ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 29 ல் ஸ்ரீதேவி நகர் பெரியார் தெருவில் உள்ள சாலை மிகவும் குண்டும் குழியுமாக போக்குவரத்து வசதி இல்லாமல் மிகவும் சிரமப்படுவதாலும் மேலும், நிவர் புயல் காரணமாக மேலும் சேதமடைந்துள்ளதாலும் சாலை வசதி ஏற்படுத்தி தருமாறு பொதுமக்கள் கோரியுள்ளார்கள். மேற்படி பகுதியினை நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆகியோர் நேரடி ஆய்வு செய்து அறிவுறுத்தியதின் அடிப்படையில் மேற்படி பகுதிக்கு புதியதாக சிமெண்ட் சாலை அமைக்கவும் அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.22.00 இலட்சத்திற்கும் மேற்படி பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி பொது அல்லது மாநில பேரிடர் நிவராண நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
3. 2020–21ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு செய்திடவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 818 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்–32**

ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 27 அண்ணா தெருவில் உள்ள பகுதியில் குடிநீர் வசதி இல்லாமல் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுவதாகவும், மேற்படி பகுதிக்கு புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து பொது குழாய் வசதி ஏற்படுத்தி தருமாறு பகுதி பொதுமக்கள் மனு மூலம் கோரியுள்ளார்கள். மேற்படி பகுதியினை மாநகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோர் நேரடி ஆய்வு செய்து அறிவுறுத்தியதின் அடிப்படையில் மேற்படி, பகுதிக்கு புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்கவும் அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.7.20 இலட்சத்திற்கும் மேற்படி பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி பொது/குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
3. 2020–21ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு செய்திடவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 819 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்–33**

ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 27 கலைஞர் தெருவில் உள்ள பகுதியில் குடிநீர் வசதி இல்லாமல் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுவதாகவும், மேற்படி பகுதிக்கு புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து பொது குழாய் வசதி ஏற்படுத்தி தரும்படி பகுதி பொதுமக்கள் மனு மூலம் கோரியுள்ளார்கள். மேற்படி பகுதியினை மாநகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோர் நேரடி ஆய்வு செய்து அறிவுறுத்தியதின் அடிப்படையில் மேற்படி, பகுதிக்கு புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்கவும் அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.7.20 இலட்சத்திற்கும் மேற்படி பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி பொது/குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
3. 2020–21ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு செய்திடவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 820 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்–34**

ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 27 லாசர் நகர் 8வது தெரு மற்றும் புதுநகர் முதல் தெரு இணைப்பில் உள்ள பகுதியில் குடிநீர் வசதி இல்லாமல் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுவதாகவும், மேற்படி பகுதிக்கு புதியதாக ஒரு ஆழ்துளை கிணறு அமைத்து பொது குழாய் வசதி ஏற்படுத்தி தருமாறு பகுதி பொதுமக்கள் மனு மூலம் கோரியுள்ளார்கள். மேற்படி பகுதியினை மாநகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோர் நேரடி ஆய்வு செய்து அறிவுறுத்தியதின் அடிப்படையில் மேற்படி, பகுதிக்கு புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்கவும் அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.7.20 இலட்சத்திற்கும் மேற்படி பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி பொது/குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
3. 2020–21ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு செய்திடவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

// மாமன்ற தீர்மான எண் 821 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //

## பொருள் எண்–35

ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 44 ல் உள்ள பட்டாபிராம் நேரு நகர் பகுதியில் குடிநீர் வசதி இல்லாமல் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுவதாகவும், மேற்படி பகுதிக்கு புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து பொது குழாய் வசதி ஏற்படுத்தி தருமாறு பகுதி பொதுமக்கள் மனு மூலம் கோரியுள்ளார்கள். மேற்படி பகுதியினை மாநகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோர் நேரடி ஆய்வு செய்து அறிவுறுத்தியதின் அடிப்படையில் மேற்படி, பகுதிக்கு புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்கவும் அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.8.00 இலட்சத்திற்கும் மேற்படி பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

### அலுவலக குறிப்பு:-

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி பொது/குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
3. 2020–21ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு செய்திடவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

// மாமன்ற தீர்மான எண் 822 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //

## பொருள் எண்–36

ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 25 முதல் 48 வரை உள்ள பகுதியில் உள்ள ஆழ்துளை கிணறுகளின் பேனல் போர்டுகள் மற்றும் மின் கேபிள்கள் பழுதடைந்துள்ளதால் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பணி மிகவும் பாதிப்படைந்துள்ளது. மேற்படி பகுதியினை மாநகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோர் நேரடி ஆய்வு செய்து அறிவுறுத்தியதின் அடிப்படையில் பழுதடைந்த பேனல் போர்டுகள், மின் கேபிள்கள் மாற்றி அமைத்தல் பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ6.00 இலட்சத்திற்கு பணியினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

### அலுவலக குறிப்பு:-

1. மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
3. 2020–21ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு செய்திடவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

// மாமன்ற தீர்மான எண் 823 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //

**பொருள் எண்–37**

ஆவடி மாநகராட்சியில் மாநகராட்சி முன் அமைக்கப்பட்டுள்ள கொரோனா பரிசோதானை மையம் மற்றும் அரசு மருத்துவமனை வளாகத்தில் இயங்கி வருகிறது. மேற்படி மையம் மருத்துவமனை ஊழியர்கள் குடியிருப்பு ஒட்டி அமைந்துள்ளதால் GI Sheet கொண்டு தடுப்பு அமைத்து பாதுகாப்பினை உறுதி செய்யுமாறு திருவள்ளூர், மாவட்ட ஆட்சி தலைவர் அவர்கள் ஆய்வின் போது அறிவுறுத்தியுள்ளார்கள். அதன் அடிப்படையில் மாநகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோர் அறிவுறுத்தியதின் அடிப்படையில் குடியிருப்பு பகுதியில் முன்புறத்தில் GI Sheet கொண்டு தடுப்பு அமைக்க மதிப்பீடு ரூ2.80 இலட்சத்திற்கு பணியினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
3. 2020–21ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு செய்திடவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 824 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்–38**

இம்மாநகராட்சி பொது சுகாதாரம் பிரிவில் இயங்கி வரும் காம்பேக்ட் வாகன எண் TN 12 V 9522 ல் வருடாந்திர ஆய்வு சான்றிதழ் பெறவேண்டியுள்ளதால் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்து தகுதி சான்று பெற அவசியமாகிறது. எனவே மேற்படி பணியினை அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையில் மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.3.10 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண். 7214/2020/H2

**அலுவலக குறிப்பு:–**

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மேல் நடவடிக்கை தொடர மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 825 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்—39**

இம்மாநகராட்சி பொது சுகாதாரம் பிரிவில் இயங்கி வரும் டிப்பர் வாகன எண் TN 20 9984 ல் வருடாந்திர ஆய்வு சான்றிதழ் பெறவேண்டியுள்ளதால் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்து தகுதி சான்று பெற அவசியமாகிறது. எனவே மேற்படி பணியினை அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையில் மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.**3.20** இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண். **7215/2020**/H2

**அலுவலக குறிப்பு:—**

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மேல் நடவடிக்கை தொடர மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 826 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்—40**

இம்மாநகராட்சி பொது சுகாதாரம் பிரிவில் இயங்கி வரும் டிப்பர் வாகன எண் TN 20 8640 ல் வருடாந்திர ஆய்வு சான்றிதழ் பெறவேண்டியுள்ளதால் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்து தகுதி சான்று பெற அவசியமாகிறது. எனவே மேற்படி பணியினை அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையில் மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.**2.90** இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண். **7213/2020**/H2

**அலுவலக குறிப்பு:—**

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மேல் நடவடிக்கை தொடர மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 827 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

**<u>பொருள் எண்–41</u>**

இம்மாநகராட்சி பொது சுகாதாரம் பிரிவில் இயங்கி வரும் காம்பேக்ட் வாகன எண் TN 20 6832 ல் வருடாந்திர ஆய்வு சான்றிதழ் பெறவேண்டியுள்ளதால் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்து தகுதி சான்று பெற அவசியமாகிறது. எனவே மேற்படி பணியினை அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையில் மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.4.50 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண். 7419/2020/H2

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மேல் நடவடிக்கை தொடர மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**<u>// மாமன்ற தீர்மான எண் 828 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //</u>**

**<u>பொருள் எண்–42</u>**

இம்மாநகராட்சி பொது சுகாதாரம் பிரிவில் இயங்கி வரும் ஆட்டோ வாகன எண் TN 20 CW 5115 ல் வருடாந்திர ஆய்வு சான்றிதழ் பெறவேண்டியுள்ளதால் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்து தகுதி சான்று பெற அவசியமாகிறது. எனவே மேற்படி பணியினை அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையில் மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.1.30 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண். 7556/2020/H2

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மேல் நடவடிக்கை தொடர மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**<u>// மாமன்ற தீர்மான எண் 829 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //</u>**

**பொருள் எண்—43**

எண். TN 20 J 6127 வருடாந்திர ஆய்வு சான்றிதழ் பெறவேண்டியுள்ளதால் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்து தகுதி சான்று பெற அவசியமாகிறது. எனவே மேற்படி பணியினை அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையில் மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.2.70 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண். 7212/2020/H2

**அலுவலக குறிப்பு:—**

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மேல் நடவடிக்கை தொடர மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 830 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்—44**

இம்மாநகராட்சி பொது சுகாதாரம் பிரிவில் இயங்கி வரும் ( டாட்டா ஏசி) வாகன எண் TN 20 CW 5122 ல் வருடாந்திர ஆய்வு சான்றிதழ் பெறவேண்டியுள்ளதால் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்து தகுதி சான்று பெற அவசியமாகிறது. எனவே மேற்படி பணியினை அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையில் மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண். 7420/2020/H2

**அலுவலக குறிப்பு:—**

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மேல் நடவடிக்கை தொடர மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 831 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்—45**

இம்மாநகராட்சி பொது சுகாதாரம் பிரிவில் இயங்கி வரும் டிப்பர் வாகன எண் TN 20 J 6126 வருடாந்திர ஆய்வு சான்றிதழ் பெறவேண்டியுள்ளதால் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்து தகுதி சான்று பெற அவசியமாகிறது. எனவே மேற்படி பணியினை அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையில் மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.**3.00** இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண். 7492/2020/H2

**அலுவலக குறிப்பு:—**

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மேல் நடவடிக்கை தொடர மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 832 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்—46**

இம்மாநகராட்சி பொது சுகாதாரம் பிரிவில் இயங்கி வரும் லாரி வாகன எண் TN 20 V 9608 வருடாந்திர ஆய்வு சான்றிதழ் பெறவேண்டியுள்ளதால் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்து தகுதி சான்று பெற அவசியமாகிறது. எனவே மேற்படி பணியினை அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையில் மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.**2.50** இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண். 7494/2020/H2

**அலுவலக குறிப்பு:—**

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மேல் நடவடிக்கை தொடர மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 833 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்—47**

இம்மாநகராட்சி பொது சுகாதாரம் பிரிவில் இயங்கி வரும் ( டாட்டா ஏசி) வாகன எண் TN 20 CW 5160 ல் வருடாந்திர ஆய்வு சான்றிதழ் பெறவேண்டியுள்ளதால் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்து தகுதி சான்று பெற அவசியமாகிறது. எனவே மேற்படி பணியினை அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையில் மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.1.60 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண். 7421/2020/H2

**அலுவலக குறிப்பு:—**

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மேல் நடவடிக்கை தொடர மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 834 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்—48**

ஆவடி மாநகராட்சி பொது சுகாதாரம் பிரிவில் இயங்கி வரும் (செல்லேஜ்) லாரி எண் TN 20 B 1751 ல் வருடாந்திர ஆய்வு சான்றிதழ் பெறவேண்டியுள்ளதால் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்து தகுதி சான்று பெற அவசியமாகிறது. எனவே மேற்படி பணியினை அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையில் மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.5.30 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண். 3473/2020/H2

**அலுவலக குறிப்பு:—**

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மேல் நடவடிக்கை தொடர மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 835 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்–49**

ஆவடி மாநகராட்சி பொது சுகாதார பிரிவு காந்தி நகர், திருமுல்லைவாயல் மற்றும் பட்டாபிராம் ஆகிய கோட்டங்களில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக 3 டிராக்டர்கள் வாடகைக்கு அக்ரோ நிறுவனத்தின் மூலம் ஒப்பந்தம் செய்யப்பட்டு 20.12.2020–ல் தேதியில் முடிவடைய உள்ளதால் பொது சுகாதார பணிக்கு அவசர அவசியம் கருதி 21.12.2020 முதல் 31.03.2021 வரை 101 நாட்களுக்கு குறைந்த ஒப்பந்த புள்ளி வழங்கிய அக்ரோ நிறுவனத்திற்கு கூடுதலாக பணி நீட்டிப்பு செய்ய இதற்கான தோராய செலவு ரூ.7.50/– லட்சத்திற்கு மற்றும் முன் அனுமதிக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

ந.க.எண்.6917/2018/எச்1

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றும் பணி உத்திரவு வழங்க மாமன்ற அனுமதி அளிக்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 836 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்– 50**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை – புரட்சித் தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பிட்டுத் திட்டம் – ஊரகம் மற்றும் நகர்புறப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களின் கூடுதல் விவரங்களை கணக்கெடுப்பதற்கு உரிய வழிக்காட்டு நெறிமுறை ஆணை. அரசு ஆணை நிலை எண் 170 நாள். 27.10.2020 ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சித் (ம.அ.தி.3) துறை தொடர்பான அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண். 2168/2019/H2

அ.கு: மாமன்றம் பதிவுச்செய்யலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 837 நாள் 30.11.2020 பதிவுசெய்யப்பட்டது //**

**பொருள் எண்– 51**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை – புரட்சித் தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பிட்டுத் திட்டம் – ஊரகம் மற்றும் நகர்புறப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களின் கூடுதல் விவரங்களை கணக்கெடுப்பதற்கு உரிய வழிக்காட்டு நெறிமுறை ஆணை வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி ( மற்றும்) ஊராட்சித் (ம.அ.தி.3) துறை அரசு ஆணை (நிலை) எண். 170 நாள்.27.10.2020 சார்வரி, ஐப்பசி11, திருவள்ளுவர் ஆண்டு 2051.

1. புரட்சித் தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பிட்டுத் திட்டம் – ஊரகம் மற்றும் நகர்புறப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களின் கூடுதல் விவரங்களை கணக்கெடுப்பதற்கு வரைவுப் பட்டியலில் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் வருவாய் ஈட்டுபவரின் பெயர், தந்தை / கணவர் பெயர் (திருமணமான பெண்கள்), பாலினம், பிறந்த தேதி, இனம், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களின் பட்டியல் எண் ( கட்டாயம் ), ஆதார் எண் ( கட்டாயம் ), குடும்ப அட்டை எண் ( கட்டாயம் ), IFSC Code, வங்கி கணக்கு எண், வருவாய் ஈட்டுபவரின் தொழில், முழு அஞ்சல் முகவரி (வீட்டு எண், தெரு பெயர், கிராமம், தாலுகா, மாவட்டம் மற்றும் குறியீடு எண்), அலைபேசி எண், பரிந்துரைக்கப்பட்டவரின் பெயர், உறவுமுறை, பரிந்துரைக்கப்பட்டவரின் ஆதார் எண், முகவரி, UFC விவரங்கள், வங்கி, வங்கிக்கிளை, IFSC Code, மற்றும் வங்கி கணக்கு எண் போன்ற வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களின் புள்ளி விபர கணக்கில் ஏற்கனவே உள்ள விவரங்கள் காப்பீட்டு திட்ட சேர்ப்பு படிவத்தில் (Pre Populated) அச்சிடப்பட்டு வீட்டுக்கு வீடு நேரிடையாக சென்று கணக்கெடுப்பு மூலம் தேவையான கூடுதல் விவரங்கள் சேகரிக்கப்பட வேண்டும்.

2. வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடுப்பங்களின் பட்டியலை மேம்படுத்த சேகரிக்கப்பட்ட கூடுதல் புள்ளி விவரங்களை சரிபார்த்து இணையதளத்தின் (www.tipps.in) மூலம் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

3. மேற்காணும் நடைமுறைகளை செயல்படுத்திட வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களின் கூடுதல் விவரங்களை சேகரிப்பதற்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.15/– வீதம் (ரூபாய் பதினைந்து) செலவு என்ற அடிப்படையில் (இதில் படிவம் அச்சிடுதல் (Pre Populated form) ரூ.5/– தகவல் சேகரிப்பு பணி ரூ.5/– தகவல்களை இணையத்தில் பதிவேற்றம் செய்தல் ரூ.5/–). மேற்படி பணிகள் மேற்கொள்ள அரசாணையில்

ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி ஆணைக்கிணங்க ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடுப்பங்களின் கூடுதல் விவரங்கள் சேகரிக்கும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது. விண்ணப்பங்களை கணினியில் பதிவிறக்கம் செய்து அச்சிட்டு வழங்கவும், கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளவும் கணினியில் பதிவேற்றம் செய்யவும் தோராய செலவு ரூ.2,38,020/- (15868 X 15 = 238020) தோராய செலவு மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண். 2168/2019/H2

அ.கு: மாமன்றம் அனுமதிக்கலாம்.

// மாமன்ற தீர்மான எண் 838 நாள் 30.11.2020 அனுமதிக்கப்பட்டது //

பா.நாராயணன்
(ஒப்பம்) / xxxxxxxxx
தனி அலுவலர் / ஆணையர்
ஆவடி மாநகராட்சி.

நாள்: 30.11.2020